TNRM010019442024

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.

2024ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் நாள் செவ்வாய்கிழமை
மோ.வா.வி.கோ.தீ.அசல் மனு எண்.82/2024
**CNR No: TNRM01-001944-2024**
****

சிவரஞ்சனி, வயது 24/2024, த/பெ.நம்புராஜன், கதவு எண் 2/146, அம்மன்கோவில் குடியிருப்பு, அழகன்குளம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

**..... மனுதார்**

**/எதிர்/**

1) அடைக்கலம், த/பெ. காடன், எண்.9, புதுத்தெரு, திருக்கோ கர்ணம், புதுக்கோட்டை – 622 002.

2) ஜெனரல் மேனேஜர், HDFC, ERGO ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், 519, NH 85, காமராஜ் சாலை, மதுரை–625 009.

3) சாலியா, க/பெ. அல்லாபிச்சை, எண்.1/157, அலங்கானூர், முதுகுளத்தூர்– 623 712, இராமநாதபுரம் மாவட்டம்.

4) அஜிஸ்ஜெண்ட் லீகல் மேனேஜர், சோழமண்டலம் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., 3 & 4 திண்டுக்கல் ஹைவேஸ் ரோடு ஸ்ரீ ENT Hospital, காளவாசல், மதுரை–16.

**.... எதிர்மனுதாரர்கள்**

இம்மனு மோட்டார் வாகன விபத்துச் சட்டம் பிரிவுகள் 140, 141, 142, 163(பி), 166 மற்றும் 182(ஏ) 1988ன் படியும், உடன் இணைந்த மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாய விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 54/1994 விதி 3(1)ன் படியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர் நம்புராஜன். அவரின் வாரிசான மனுதாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.30,00,000/- இழப்பீடாக எதிர்மனுதாரர்களை கொடுக்க உத்தரவிட்டும்,

மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாக்கல் தேதியிலிருந்து நீதிமன்றத்தில் இழப்பீடு பணம் செலுத்தும் தேதி வரை 12% வட்டியுடனும் இம்மனுவிற்கான செலவுத்தொகை மற்றும் வழக்கறிஞர் கட்டணத்தையும் சேர்த்து எதிர்மனுதாரர்கள் கொடுக்கும்படி உத்தரவு கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதார்கள் ரூ.30,00,000/- இழப்பீடாக கோரியுள்ளார். அதற்கு நீதிமன்றக் கட்டணமாக மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயம் 1989 ம் ஆண்டு விதி 24(1)ன் கீழ் ரூ.29,372.50/- செலுத்தப்படவேண்டும். ஆனால் மனுதாரரால் ரூ.372.50/- மட்டும் நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.29,000.00/-க்கு U/s.24(3) M.V.Act ன்படி நீதிமன்ற கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வேண்டி 05.04.2024 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு இ.ம.எண்.1/2024 ஆக இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள்: 02.04.2024 & 05.04.2024.

இம்மனுவானது 30.07.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G. தமிழ்வேந்தன் B.E.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.A. தர்மராஜ் M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 3 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.T.விஜயகார்த்திக் B.A.,L.L.B., அவர்கள் ஆஜராகியும் 4 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.C. பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப் படுத்தப்பட்டார்கள். மனுதாரர் அழைக்கப்படும் ஆஜரில்லாத நிலையில்

TNRM010019442024

இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. மனுதாரர் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததாலும், எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யாததாலும் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. செலவுத் தொகை பற்றி உத்தரவு இல்லை.

2024ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்படுகிறது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**M.C.O.P.No.82/2024**

**தீர்ப்பாணை உத்தரவு**

**நாள்: 30.07.2024**